Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර්

11.01.2021 திங்கட்கிழமை



# மாணவர்களின் போராட்டம் வெற்றி

# இடிக்கப்பட்ட இடத்தில் எழுப்பப்படுகிறது தூபி

## இன்று அடிக்கல்லும் நடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அமைப்பதற்கு துணைவேந்தர் இணக்கம் தெரிவித்தார். இதையடுத்து புதிதாக தூபி அமைப்பதற்கு அடிக்கல்லும் நடப்பட்டது. 2



## துணைவேந்தர், மாணவர்களை நினைவிடத்துக்கு செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினர் பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஜன. 11

தூபியை மீண்டும் அமைப்பதற்கு அடிக்கல் நடுவதற்காக துணைவேந்தரும் மாணவர்களும் சென்றபோது பொலிஸாரும், 2

## துக்க நாளாக மாற்றப்பட்டது இயல்பு மறுப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் தூபி இடிக்கப்பட்டமையை அடுத்து இன்றைய தினம் இயல்பு மறுப்புப் போராட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப் 2

## ஆசிரியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று!

வவுனியா, ஜன. 11

வவுனியா வடக்கு நெடுங்கேணி கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் பி.சி. ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் ஆசிரியர் ஒருவருக்கு 2

## வவுனியாவில் துப்பாக்கிச் சூடு

*அதிதீவிர சிகிச்சையில் ஒருவர்*

வவுனியா, ஜன. 11

வவுனியா அரசமுறிப்பில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபரொருவர் வவுனியா 2

## வாசுதேவவுக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 11

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார். முன்னதாக கொரோனா 2

## யாழ் பல்கலை விவகாரம் சுமுகமானத் தீர்க்கப்படும்

*கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 11

'யாழ். பல்கலைக் கழக நினைவுத்தூபி விவகாரத்தை பயன்படுத்தி குழம்பிய குட்டை யில் மீன்பிடிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்ற னர். அதற்கான வாய்ப்பு வழங்கப்படாது. 4

## இரணைமடு குளத்தின் வான்கதவுகள் திறப்பு!

*கிளி. மாவட்டத்துக்கு வெள்ள எச்சரிக்கை!*

கிளிநொச்சி, ஜன. 11

தொடர் மழை காரணமாக கிளிநொச்சிக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இரணைமடு குளத்தின் அனைத்து வான்கதவுக 2





## பரராஜசிங்கம் கொலை வழக்கு

## பிள்ளையான் உள்ளிட்டவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை வாபஸ்!

*நாளைமறுதினம் தீர்ப்பு*

கொழும்பு, ஜன. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்த குற்றச்சாட்டில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் 2

## தூபி இடிப்பதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி

# இயல்பை இழந்த வடக்கு -கிழக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமையை அடுத்து வடக்கு மற்றும் கிழக்கில் இன்று 2

# இடிக்கப்பட்ட...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த வெள்ளிக்கிழமை இரவோடிர வாக இடித்து அகற்றப்பட்டது. இதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாண வர்கள் என்று பலரும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். தமிழகத்திலும் உலக அளவிலும் எதிர்ப்பலை ஏற்பட் டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் உணவு ஒறுப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த நிலையில் இடிக்கப்பட்ட தூபியை மீண்டும் அமைக்க துணைவேந்தர் சிறிசற்குணராஜா இணக்கம் தெரிவித் தார். மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட இடத்துக்கு இன்று அதி காலை 3 மணியளவில் வந்த அவர் தூபி மீண்டும் அமைக்கப்படும் என்ற வாக்கு றுதியை மாணவர்களுக்கு வழங்கினார். இதையடுத்து மாணவர்கள் தம் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். பின்னர் மாணவர்களும் துணைவேந்தரும் இணைந்து தூபி இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் அதை எழுப்புவதற்கு அடிக்கல் நட்ட னர். (ம)

## நினைவிடத்துக்கு செல்லவிடாமல்...

சிறப்பு அதிரடிப் படையினரும் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றனர். இதையடுத்து பல்கலையில் சிறு பதற் றம் ஏற்பட்டுத் தணிந்தது.
தூபி மீண்டும் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை மாணவர்களுக்கு வழங்கிய துணைவேந்தர், அவர்களையும் அழைத்துக் கொண்டு பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்தபோது ஆரம்பத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றனர். எனினும் அவர் களை மீறி மாணவர்களை அழைத்துக் கொண்டு துணை வேந்தர் சென்றார். இதன்போது கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நினைவிடம் செல்வதற்கு மீண்டும் தடை விதித்தார். இதையடுத்து 'என் மாணவர்கள் உணவில் லாமல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களின் போராட்டத்தை நான் முடித்து வைக்க வேண்டும். புதிய கட்டடங்களை நாம் இப்போது அமைக்கவில்லை. செல்ல விடுங்கள்' என்று தெரிவித்து நினைவிடத்துக்குச் சென்ற

## இரணைமடு...

ளும் திறக்கப்பட்டன.
இன்று காலை 6 மணி வாசிப்பின் பிரகாரம் கிளிநொச்சி நீர்பாசனக் குளங்கள் மீண்டும் வான் பாய ஆரம்பித்துள்ளன என்றும் வெள்ள முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் நீர்பாசன திணைக்களம் தெரிவித் துள்ளது.
இரணைமடு குளத்துக்கு அதிக நீர்வரத்து உள்ளதால் நேற்று இரவு 6 வான்கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. இன்று காலை இரு கதவுகள் மூடப் பட்டு 4 கதவுகள் திறக்கப்பட்டன. பின்னர் நீர் வரத்து அதிகரித்ததால் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டன. இதனால் பன்னங் கண்டி, முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, பரந்தன், உமையாள் புரம் உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதான மாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது. (ம-6)

## ஆசிரியர்...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
வவுனியா வடக்கு நெடுங்கேணி கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் என 276 பேருக்கு மேற்கொள்ளப் பட்ட சோதனையிலேயே மேற்படி ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பிறிதொரு நபரின் முடிவு சந்தேகத்துக்கு இடமான வகை யில் உள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது. (ம-18)

## துக்க நாளாக....

பட்ட நிலையில், தூபியை மீண்டும் அமைப்பதற்கு இணக்கம் ஏற்பட்டதை அடுத்து போராட்டம் துக்கதின மாக மாற்றப்பட்டது.
பல்கலைக்கழக வாயிலில் உணவொறுப்பில் ஈடுபட்ட மாணவர்களை துணைவேந்தர் சந்தித்து நினைவுத் தூபி அமைக்க இணக்கத்தைத் தெரிவித்ததை அடுத்து இயல்பு மறுப்புப் போராட்டம் துக்க தினமாக மாற் றப்பட்டது. (ம)

## பிள்ளையான்...

(பிள்ளையான்) உள்ளிட்ட 5 பேருக்கும் எதிராக மட் டக்களப்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை சட்டமா அதிபர் திரும்பப் பெற் றார். இதையடுத்து வழக்கின் தீர்ப்பு நாளைமறுதினம் வழங்கப்படவுள்ளது. குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. சந்திரகாந்தன் உள்பட 5 எதிரிகளும் மன்றில் முன்னிலையாகினர். வழக்குத் தொடுனர் சார்பில் மூத்த அரச சட்டவாதி மாதவ தென்னக்கோன், அரச சட் வாதி செகான் முஸ்தபா ஆகியோர் முன்னிலையாகினர். சந்தேக நபர்கள் சார்பில் வழமையாக முன்னிலையாகும் ஜனாதிபதி சட்டத்தரணி உள்ளிட்ட பலர் முன்னிலை யாகினர். எதிரிகள் 5 பேருக்கும் எதிரான குற்றப்பத்திரி கையை மீளப்பெறப்படுகிறது என மூத்த அரச சட்ட வாதி மன்றுரைத்தார்.
2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டிருந்தபோது, முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார்.
இந்தப் படுகொலை வழக்கில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாய் மதுசிங்க ஆகி யோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். நாடாளுமன்றத் தேர்தலில் பிள்ளையான் வெற்றிபெற்றதை அடுத்து அவ ருக்கு இறுக்கமான நிபந்தனைகளுடன் அண்மையில் பிணை வழங்கப்பட்டது. தற்போது எதிரிகள் மீதான குற்றப்பத்திரிகை திரும்பப் பெறப்பட்டது. (ம)

## இயல்பை....

இயல்பு மறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி கடந்த வெள்ளிக்கி ழமை இரவு நிர்வாகத்தால் இடித்தழிக்கப்பட் டது. அனுமதி பெறாத கட்டடங்களை அழிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்ப டையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது என்று துணைவேந்தர் தெரிவித்தார். இந்தச் செயலுக்கு உலக அளவில் கடும் கண்டனங்கள் குவிந்தன. அரசியல் கட்சிகள் ஓரணியில் நின்று இன்று இயல்பு மறுப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. இந்த இயல்பு மறுப்புப் போராட்டத்துக்கு பல தரப்பினரும் ஆதரவைத் தெரிவித்தனர். இந்த நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் இந்தப் போராட்டம் பெருவெற்றிபெற்றது. (ம)

## வவுனியாவில்....

மாவட்ட மருத்துவமனையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர் பில் தெரியவருவதாவது:
வவுனியா ஓமந்தை அரசமுறிப்புப் பகுதியில் கண வன் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாட்டை அடுத்து, அந்தப் பகுதிக்கு வந்த பெண்ணின் சித்தப்பாவால் இந்தச் சூட்டுத் தாக்கு தல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததை அடுத்து பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவரிடம் இருந்த துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றி யுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-110)

## வாசுதேவவுக்கு....

தொற்று உறுதிப்படுத்தப்பட்டப்பட்ட ரவூப் ஹக்கீமு டன் தொடர்பைப் பேணிய நாடாளுமன்ற உறுப்பி னர்கள் 21 பேர் இதுவரை அடையாளம் காணப்பட் டனர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலை யில் வாசுதேவ நாணயக்காரவுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பணியாளர் கள் என 300 பேருக்கு அன்டிஜன் சோதனை மேற் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம)

# நாட்டில் எவரும் எப்போதும் தொற்றாளராகும் அபாயம்!!

* தீவிரமடைகிறது தொற்று
* உபகொத்தணிகளுக்கு வாய்ப்பு
* எச்சரிக்கிறது பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்

நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொற்று ஏற்பட்டுவரும் நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று நிலையின் பாரதூரம் குறித்து தெளிவாகின்றது. எனவே, அனைத்து தரப்பினரும் எப்போதும் கொரோனா கட்டுப் பாட்டுக்கு உண்மையான அர்ப்பணிப்பைக் காட்ட வேண்டியது அவசியம். இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.
மேலும், இலங்கையின் அரசியல்வாதிகள் தொற் றாளராக அடையாளம் காணப்பட்டுள்ள நிலை யில், நாம் எவ்வாறான பாதுகாப்பு விடயங்களைப் பின்பற்றினாலும் இன்றைய நிலையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்த வொரு நபரும் தொற்றாளராக மாறும் சந்தர்ப் பம் அதிகம் உள்ளது. நாட்டின் ஏனைய பிரதே சங்களில் தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர்கள் அவர்களது கடமைகளை உரியமு றையில் நிறைவேற்றாமை மற்றும், அந்தந்த பிரதேசங்களிலுள்ள தொற்றாளர்களின் முதல் நிலை தொற்றாளர்கள் தொடர்பான தகவல் களை வழங்காமை ஆகியன காரணமாக, நாம் அவர்களை தனிமைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, கொரோனா பரவல் கொழும்பில் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட் டுள்ள நிலையில், கொழும்பைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் தொற்றாளர்களின் எண் ணிக்கை எதிர்பார்க்காதளவு அதிகரித்துச் செல் கின்றது. எனவே கொழும்பை விட ஏனைய இடங்களில் கொரோனா உபகொத்தணிகள் பரவும் நிலையும் அதிகரித்துள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)

# முள்ளிவாய்க்கால் தூபி இடிப்பு: இயல்பை இழந்தது தாயகம்



யாழ்ப்பாணம்





மன்னார்










கிளிநொச்சி











முல்லைத்தீவு





(19, 6,110, 150, 7)

புதுக்குடியிருப்பு

# தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்குத் தொற்று உறுதி

முல்லைத்தீவு, ஜன.11

வெளிநாட்டிலிருந்து வருகை தந்து புதுக்குடியிருப்பு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து 150 பேர் கடந்த 9ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு 5 பேருந்துக்களில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு திம்பிலி பகுதியில் உள்ள 68 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து அவரை கிளிநொச்சியில் உள்ள கொரோனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (வ-19)



வவுனியா





கொரோனா அச்சத்தால்

# 21 எம்.பிக்கள் சுயதனிமையில்

கொழும்பு, ஜன. 11

கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றியுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் விவகாரங்களுக்கான ஒருங்கிபணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே ஆகியோருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த 21 எம்.பிக்களே இவ்வாறு சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், சபாநாயகர் அலுவலக ஊழியர்கள் உட்பட மேலும் சிலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ரவூப் ஹக்கீமுடன் உரையாடலில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரள, கயந்த கருணாதிலக்க ஆகியோருக்கு வைரஸ் தொற்றவில்லை என ஆரம்பக்கட்ட பி.சி.ஆர் பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது. (ம-44)

# இலங்கைக்குப் பயணம்செய்ய பாக்.பிரதமர் இம்ரான்கான் திட்டம்!

கொழும்பு, ஜன. 11

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இந்தத் தகவலை இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மஹ்முட் சாட் கட்டாக் வெளியிட்டுள்ளார்.

பாக்கிஸ்தான், உலகின் ஏனைய நாடுகளைப்போலவே இலங்கையின் இறையாண்மையை மதிக்கிறது. இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையிடுவதை விரும்பவில்லை. பிரதமர் இம்ரான்கானின் அரசாங்கம் இலங்கையுடன் நெருக்கமான உறவைக்கொண்டிருக்கவில்லை என்று கூறமுடியாது.

கொரோனா காரணமாக தடங்கல்கள் உள்ளன. எனினும் பிரதமர் இம்ரான் கானின் கொழும்பு வருகையும் திட்டமிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு சீனா வழங்கும் உதவிகள் தொடர்பில் தவறான விளக்கங்களும் தவறான பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# யாழ் பல்கலை...

பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படும். தேவையேற்படின் யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து தரப்புகளுடனும் பேச்சு நடத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தயாராகவே இருக்கிறார் இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் பொதுவான சட்டம் உள்ளது. பல்கலைக்கழக வளாகத்தில் நினைவு சின்னமொன்றையோ, சிலையொன்றையோ அல்லது நிர்மாணமொன்றையோ காட்சிப்படுத்துவதற்காக இருந்தால் அதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி அவசியம். ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மேற்படி நினைவு சின்னத்தை அமைப்பதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இந்த காரணத்துக்காக மட்டுமே நினைவு சின்னம் அகற்றப்பட்டுள்ளது. அது ஒழுக்கம் மற்றும் ஒருமைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். மாறாக இதன் பின்னணியில் எவ்வித அரசியலும் கிடையாது.

இப்பிரச்சினை சுமூகமாக தீர்க்கப்படவேண்டும். அதனை இழுத்தடிப்பது அரசின் நோக்கம் கிடையாது. குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கான வாய்ப்பு உருவாவதற்கு இடமளியோம். யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மாணவர்களுடன் இன்று பேச்சு நடத்தி, இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார். பிரச்சினை சுமுகமாக தீரும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். தேவையேற்படின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரகோன் அங்குசென்று இவ்விவகாரம் குறித்து பல்கலைக்கழகத்தின் அனைத்து தரப்புகளுடனும் பேச்சு நடத்துவதற்கு தயாராக உள்ளார்' என்றார். (ம-44)







பல்கலைக் கழகத் தூபி உடைப்பைக் கண்டித்து

# வைகோ தலைமையில் இன்று இலங்கை தூதரகம் முற்றுகை

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் இடிக்கப்பட்டதைக் கண்டித்து மதிமுக பொதுச்செயலர் வைகோ தலைமையில் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

தூபி இடிக்கப்பட்ட மறுநாள் அதாவது கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் முற்றுகையிடப்படும் என்று வைகோ அறிவித்தார். இந்த நிலையில் இன்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்ட பலர் கைது செய்யப்பட்டனர். (ம)

# போதைத் தடுப்பு அதிகாரிகளுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜன.11

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள்களை, போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் 13 அதிகாரிகள் உட்பட 17 நபர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என கொழும்பு தலைமை நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)



# நாட்டில் இன்றுமுதல் விசேட கண்காணிப்பு

### பொலிஸ்மா அதிபர் அதிரடி

கொழும்பு, ஜன.11

நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கபடுகின்றனவா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக இன்று முதல் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டிலுள்ள அனைத்து நிறுவனங்கள், காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட தொழில் ஸ்தானங்களிலும் பொதுப் போக்குவரத்தின் போதும், தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாகக் கடைப்பிடிக்கபடுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு இன்று முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் சுகாதார பிரிவினருடன் பொலிஸாரும் இணைந்து செயற்படவுள்ளனர். பொது போக்குவரத்து தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது - என்றார்.

## நிதி முறைகேடு:

# கைதானோர் தனிமையில்!!

கொழும்பு, ஜன.11

நிதி முறைகேடு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.ரி.ஐ நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் நான்கு பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஈ.ரி.ஐ நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்களான ஜீவக எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க மற்றும் அஞ்சலி தீபா எதிரிசிங்க ஆகியோர் 6.4 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் நால்வரும் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கினால், அவர்களுடான சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என மன்றில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே நீதிவான் அவர்களை, நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க வேண்டுமென உத்தரவிட்டார். அதற்கமையவே சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்த நிலையில் கொவிட்19 வைரஸ் பரவல் அச்சம் காரணமாக இவர்கள் சிறைச்சாலைகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

## பிரேமதாச காலத்தில் கையகப்படுத்தப்பட்ட

# விவசாய காணியை விடுவிக்க பிரதமர் மகிந்த நடவடிக்கை

கொழும்பு, ஜன.11

வனப்பாதுகாப்புத் துறையால் கையகப்படுத்தப்பட்ட பொல்பிதிகம, இருதெனியாய மக்களின் 1980 ஏக்கர் விவசாயக் காணி பிரதமர் மகிந்த ராஜபக்சவின் தலையீட்டையடுத்து விடுவிக்கப்படவுள்ளது. வன விலங்கு பகுதி என்று பெயரிடப்பட்ட இந்த பகுதி 1989 ஆம் ஆண்டில் வன பாதுகாப்புத் துறையால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அரசின் கீழ் சிறப்பு வர்த்தமானி அறிவிப்பின் மூலம் மக்களுக்குத் தெரியாமல் கையகப்படுத்தப்பட்டது.

50 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவும் இந்த பகுதியில் உள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இதையடுத்து வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க விரைவில் காணிகளை விடுவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த காணிகளுக்கான சட்ட ரீதியான உறுதிப்பத்திரங்கள் 03 மாதங்களுக்குள் வழங்கப்படும் என்று காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். (வ-இ)

# மைதானத்தை பலவந்தமாக அபகரிக்க ஈ.பி. டி. பி முயற்சி

### மீட்டுத்தருமாறு மக்கள் கோரிக்கை

திருகோணமலை, ஜன.11

திருகோணமலை அனந்தபுரி பகுதியிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில், நேற்று ஞாயிற்றுக்கிழமை பலவந்தமாக வேலி அமைக்க, ஈ. பி.டி. பி.யினர் முற்பட்டபோது அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது என இங்கிருக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிக நீண்டகாலமாக அனந்தபுரி பகுதியிலுள்ள குறித்த மைதானம் அப்பகுதி இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் குறித்த மைதானத்துக்கு பின்புறமாக உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தின் ( ஈ.பி. டி .பி) காணிக்கு அருகே அந்தக் கட்சியினரால் இன்று காலை வேலி அமைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே அக் கட்சியினருக்கும் அப்பகுதி இளைஞர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மைதானமானது பல அரசியல் தலைமைகளது உதவியுடன் புனர மைக்கப்பட்டு, இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இதனை அபகரிக்க பலர் முற்படுகின்றனர். மைதானம் இல்லாது போனால், இளைஞர்கள் பிழையான வழிமுறைகளுக்கு உட்படக்கூடும் என கவலை தெரிவித்துள்ள பிரதேச மக்கள், தகுந்த நடவடிக்கை எடுத்து மைதானத்தை மீட்டுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)





# விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.11

சுண்டிக்குளம் மேய்ச்சல் தரவையில் உள்ள கள்ளப்பட்டி பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அபிசேகங்களுடன் கூடிய கிராமிய விசேட பூசை வழிபாடும் அன்னதான நிகழ்வும் கால்நடை வளர்ப்போரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றன.

இந்தப் பூசை வழிபாடானது கால்நடைகள் நோய் வாயப்படாமல் இருப்பதற்கும் நாட்டில் சீரான காலநிலை நிலவுவதற்கும் வருடா வருடம் மார்கழி மாத வெள்ளிக்கிழமை ஒன்றில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-21)

# தனிமையிலிருந்து விடுதலையாகின மேல் மாகாணத்தின் சில பகுதிகள்

கொழும்பு, ஜன.11

மேல் மாகாணத்தின் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, தெமட்டகொடை முதலான பொலிஸ் அதிகார பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தின், வத்தளை பொலிஸ் அதிகார பிரிவின் துவவத்த, ஹுணுப்பிட்டி, வெடிகந்த மற்றும் நீர்கொழும்பு பொலிஸ் அதிகார பிரிவின் எம்.சி வீடமைப்பு யோசனைத் திட்டம் ஆகிய பிரிவுகளும் இன்று அதிகாலை 5 மணியுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. இதே நேரம், கோத்தமிபுர தொடர்மாடி குடியிருப்பு, பொரளை - கோத்தமிபுரயின் 24ம் தோட்டம், 78ம் தோட்டம் என்பன நேற்று மாலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை, இதுவரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய பிரதேசங்கள் மீண்டும் அறிவிக்கும் வரையில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாகவே காணப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். ((ந-இ)



# 12 வயது சிறுமி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன.11

மட்டக்களப்பு - பெரியகல்லாறு 02 பகுதியில் 12 வயது சிறுமி ஒருவர் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வறுமையால் தாய் வெளிநாடு சென்றதால் சிறுமி மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் எனவும் தாயின் சகோதரியின் பராமரிப்பிலேயே அவர் வளர்ந்து வந்தார் எனவும் தெரியவருகிறது. இந்த நிலையில் சிறுமி இன்று காலை சித்தியின் வீட்டிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (வ-இ)

# போதைப்பொருள் அடங்கிய பொதி சிறைக்குள் மீட்பு

கொழும்பு, ஜன.11

களுத்துறை சிறைச்சாலையின் மதிலுக்கு மேலாக தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் அடங்கிய பொதியொன்று எறியப்பட்டுள்ள நிலையில் அதனை பொலிஸார் மீட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பொதியிலிருந்து 4 தொலைபேசிகள், 7 சிம் அட்டைகள், 10 கிராம் கேரளா கஞ்சா மற்றும் ஐஸ்போதைப்பொருள் அடங்கிய இரு பைக்கெற்றுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)




## ஜனாஸா எரிப்புக்கு எதிராக
# ஆஸ்திரேலியாவில் கண்டனப் பேரணி

சிட்னி, ஜன.11

இலங்கையில், கொவிட் காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதற்கு எதிர்பைத் தெரிவித்து ஆஸ்திரேலியா வாழ் இலங்கை முஸ்லிம்களால் அமைதியான முறையில் கண்டன வாகனப் பேரணி துஆப் பிரார்த்தனையுடன் நடைபெற்றது.

ஆஸ்திரேலியா சிட்னி நிவ் சவ்த் வேல்ஸ்(NSW) மாநிலத்தில் இயங்கிவரும் ஆஸ்திரேலியா இலங்கை முஸ்லிம் சம்மேளன (ALMA) நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை இப் பேரணி இடம்பெற்றது.

இதில் பெரும்பாலான ஆஸ்திரேலிய வாழ் இலங்கை முஸ்லிம்கள் பங்கேற்றனர். வாகன ஊர்வலத்தில் இணைந்துகொண்ட வாகனங்களிலும் ஜனாஸா எரிப்புக்கு எதிராக விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு எதிர்ப்பில் ஈடுபட்டமை காணக்கூடியதாக இருந்தது. (ந)

## காலாவதியாகிய
# சாரதி அனுமதிப்பத்திரம்: உபயோக காலம் நீடிப்பு?

கொழும்பு, ஜன.11

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. தற்போதுள்ள கொரோனா தொற்று நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்க இயலாமையை கருத்தில் கொண்டு இந்த முடிவு எட்டப்படும் என்று போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில், 'சூம்', திறன் வகுப்புக்கான செயலமர்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் வளவளராக ம. அகிலன் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கான செயலமர்வை நடத்தினார். (ப-63)

# தொழிலாளர் செயலகத்துக்கு வருவதை தவிருங்கள்

கொழும்பு, ஜன.11

ஊழியர் சேமலாப நிதியத்தின் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளவும் அதற்கான விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கவும் கொழும்பு நாரஹேன்பிட்டி தொழிலாளர் செயலகத்துக்கு வருவதைத் தவிர்க்குமாறு தொழில் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரபா சந்திரகீர்த்தி பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா அச்சத்தால் கூடுதலான மக்கள் பிரதான அலுவலகத்துக்கு வருவதைத் தவிர்ப்பது இதன் நோக்கமாகும். ஊழியர் சேமலாப நிதியத்தின் கொடுப்பனவுகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் நாடு பூராகவும் உள்ள மாவட்ட மற்றும் வலய அலுவலகங்களில் மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# அரசியல் கைதிகள் விடுதலை வேண்டி வடமராட்சியில் விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.11

சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்து அவர்களை குடும்பத்துடன் இணைக்க வேண்டும் என வேண்டி வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பொங்கல் விசேட பூசை வழிபாடு நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கலந்து கொண்டார்.

தைப்பொங்கலுக்கு முன் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என சர்வமதப் பிரார்த்தனை கடந்த வாரம் 7 ஆம் திகதியில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-26)





# முட்டை உற்பத்தியாளர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## பிரதமர் ஆலோசனை

கொழும்பு, ஜன.11

பெரிய மற்றும் சிறு அளவிலான முட்டை உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார்.

பெரிய மற்றும் சிறு அளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பணிப்பாளர் குழுவுடன் இணையத்



தொழில்நுட்பம் ஊடாக கலந்துரையாடிய போதே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இனப்பெருக்கம் செய்யப்படும் ஒரு கோழியின் விலையை 220 ரூபாவாக குறைத்தல், வருடத்துக்கு கொண்டு வரப்படும் தாய் கோழிகளின் எண்ணிக்கையை 80 ஆயிரத்துக்கு மட்டுப்படுத்தல், கோழித் தீவன கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தலுக்கான கடன் நிவாரணம் பெறல், சட்டவிரோத இனப்பெருக்கம் செய்யும் நிலையங்கள் மூன்றினது செயற்பாட்டைத் தடை செய்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முட்டை உற்பத்தியாளர்களின் சங்கத்தின் பணிப்பாளர் சபை இதன்போது பிரதமரிடம் முன்வைத்தது. (ற-இ)

# அமெரிக்காவுக்கான தூதருக்கும் தொற்று

கொழும்பு, ஜன.11

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவும் இலங்கை தூதரகத்தின் நான்கு பணியாளர்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதரகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

# 1000 ரூபாவுக்கு மாற்றுத் திட்டம்!

## அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என்கிறார் நிமால் சிறிபாலடி சில்வா

பொலநறுவை, ஜன.11

தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழிற் சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டப்படாததால் மாற்றுத் திட்டம் ஒன்றை நாளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் பரிந்துரைக்கமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்தை இணக்கப்பாடின்றி முடிவடைந்த நிலையில், அடுத்தகட்டமாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-இ)



# மணல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டம்!

திருகோணமலை, ஜன.10

திருகோணமலை மாவட்டம் கிண்ணியாப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தீனேறி, கண்டற்காடு பெரியவெளி, சின்னவெளி, பட்டியானூரு, சுங்கான் குழி, குரங்கு பாஞ்சான், மஜீத் நகர், வெல்லங்குளம் உட்பட 11 விவசாய சம்மேளனங்கள் இணைந்து சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக கிண்ணியா மஜீத் நகர் இராணுவ வீதியில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தன.

மகாவலி கங்கையின் முடிவுப் பகுதியான கங்கை ஆற்றுப் பகுதிகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வால் 2 ஆயிரத்து 500 ஏக்கர் வயல் நிலங்கள், விவசாயிகள், நிரந்தரக் குடியிருப்பாளர்கள் மற்றும் பாதசாரிகள் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

இராணுவத்தால் அமைக்கப்பட்ட கிரவல் வீதி மற்றும் விவசாய உள் வீதிகள் ஊடாக கனரக வாகனங்கள், உழவு இயந்திரம் போன்றவற்றில் மணல் ஏற்றி வருகின்றனர். இதனால் வீதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வீதிகளைப் புனரமைத்து தருமாறும் கோரி இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை விவசாயிகள் முன்னெடுத்துள்ளனர். (ந-இ)

# நுவரெலியாவில் பாடசாலைகள் ஆரம்பம்

நுவரெலியா, ஜன.11

நாட்டில் நிலவி வரும் கொரோனா பரவல் அசாதாரண சூழ்நிலையில் 2021ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்கான பாடசாலை நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, ஹற்றன், வலப்பனை, கொத்மலை, ஹங்குராங்கெத்தை ஆகிய ஐந்து கல்வி வலயங்களில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட வட்டவளை மவுன்ஜீன் தோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலையில் மாத்திரம் கொரோனா பரவலால் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஏனைய கல்வி வலயங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிகல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின. (வ-இ)



# இராணுவ வீரர் விபத்தில் சாவு

மட்டக்களப்பு, ஜன.11

மட்டக்களப்பு பொலநறுவை பிரதான வீதியின் கதுறுவெலவை அண்மித்த பகுதியில் இன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி அருகிலுள்ள மின் கம்பத்தில் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலநறுவை பொலிஸார் தெரிவித்தனர். (வ-?இ)



# கொரோனா வைரஸின் மரபணுவில் மாற்றம்!!

கொழும்பு, ஜன.11

மேல் மாகாணத்தில் தீவிரமாக பரவிய கொரோனா தற்போது வேறு பகுதிகளிலும் வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பரவும் வைரஸின் மரபணுவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

தற்போது கிடைத்துள்ள தகவலுக்கு அமைய மேல் மாகாணத்துக்கு வெளியே பரவும் வீதம் 50 க்கும் அதிகம் எனவும் விசேடமாக கேகாலைப் பிரதேசத்தில் புதிதாக இரண்டு கொரோனாக் கொத்தணிகள் உருவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-இ)

# ஜனாஸாக்களை எரிப்பதா? புதைப்பதா? பரிந்துரைகளுக்கு இணங்குகின்றோம்!

## அரசியல்வாதிகள் தலையிட முடியாது என்கிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜன.11

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் சடலங்களை தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்பது தொடர்பில், ஆராய்ந்து அறிக்கையிட்டிருக்கும் விசேட நிபுணர் குழுவின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளுக்கு நாங்கள் இணங்குகின்றோம். இவ் விடயம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையில் அரசியல்வாதிகள் எவரும் தலையிட முடியாது என கிராமிய வீதிகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் சர்வதேச விமான நிலையங்கள் இரண்டும், ஜனவரி 22ஆம் திகதி வர்த்தக விமானங்கள் தரையிறங்குவதற்காக, திறக்கப்படவுள்ளன. இந்த விமான நிலையங்கள் ஊடாக, இலங்கைக்கு வருகை தருபவர்கள் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய, ஹொட்டல்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை நாட்டுக்குத் திரும்பும் எதிர்பார்ப்புடன் வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்கள், எதிர்வரும் 22ஆம் திகதிக்குப் பின்னர், நாட்டுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளும் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# சுகாதார வசதிகளின்றி தருமபுரம் மத்திய கல்லூரி

## நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.11

2021 ஆம் ஆண்டுக்கான கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் இன்றையதினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப் படவில்லை என குற்றம்சாட்டப்படுகிறது.



மாணவர்கள் கைகழுவுவதற்கு தண்ணீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான தண்ணீர் வசதியோ, சோப் வசதியோ செய்துகொடுக்கப்படவில்லை. பாடசாலைக்குள் உள்நுழையும் மாணவர்களுக்கு உடல் வெப்பம் பார்க்கப்படவில்லை. பாடசாலை தொற்று நீக்கம் செய்யப்படவில்லை என பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-113)

## 8 ஆயிரம் கிலோ மஞ்சளுடன் 12 இந்திய பிரஜைகள் கைது

கொழும்பு, ஜன.11

நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டுவரப்படவிருந்த 8 ஆயிரத்து 700 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் தொகையானது வட மேல் கடற்பிராந்தியத்தில் வைத்து இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போதே இம்மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 12 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் படகுகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என கடற்படை தெரிவித்துள்ளது. (வ-இ)

## 3 ஆவது கைதியும் மடக்கிப் பிடிப்பு!!

பொலநறுவை, ஜன.11

பொலநறுவை - கல்லேல்ல கொரோனோச் சிகிச்சை நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற தொற்றுக்குள்ளான ஐந்து கைதிகளில், மூன்றாது கைதியும் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

புத்திக விமலசிறி எனும் குருநாகல் உஹுமீய பகுதியைச் சேர்ந்த சந்தேகநபரே நாரம்மலை போகஹபிட்டியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இவர் தலைமறைவாக இருப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் தொடர்பில் நாரம்மலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பொலநறுவை கல்லேல்ல கொவிட்19 சிகிச்சை நிலையத்திலிருந்து 5 கைதிகள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அதிகாலை தப்பிச் சென்ற நிலையில், ஏற்கனவே இரண்டு கைதிகள் கைது செய்யப்பட்டதையடுத்து, மூன்றாவது கைதியும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். (ற-இ)

## ஆயிரம் ரூபா வழங்க மறுத்தால் கம்பனிகளை பொறுப்பெடுங்கள்


### சட்டத்தரணி மோகனராஜன் அரசிடம் வலியுறுத்து

நுவரெலியா, ஜன.11

அடிப்படை நாள்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படாவிட்டால் பெருந்தோட்டக் கம்பனிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எஸ். மோகனராஜன் வலியுறுத்தியுள்ளார்.

நுவரெலியா, இராகலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆயிரம் ரூபா தொடர்பான முன்மொழிவு அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இது சாத்தியமற்ற முன்மொழிவாக இருந்தால் அது பாதீட்டில் முன்வைக்கப்பட்டிருக்காது.

எனினும், அதனை எதிர்க்கக் கூடிய நிலையில் கம்பனிகள் காணப்படுவது சிக்கலானது. உரிய இலாபம் ஈட்டுவதால் ஆயிரம் ரூபாவை கம்பனிகளால் வழங்க முடியும். ஆனால் சம்பள உயர்வை வழங்காதிருக்கவும் வரிகளிலிருந்து தப்பவும் கம்பனிகள் உரிய தரவுகளைக் காட்டுவதில்லை. ஏனைய துறைகளைப் போன்று பெருந்தோட்டத்துறையிலும் மாபியா செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



## ஓட்டமாவடியில் 36 பேருக்கு தொற்று!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று வரை 36 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி எம்.எச்.எம். தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்கனவே கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர்களது உறவினர்கள் 84 பேருக்கு நேற்றுமுன்தினம் உலமா சபை கட்டடத்தில் செய்யப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இரண்டு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடிப் பிரதேச செயலக பிரிவில் கொரோனாத் தொற்றின் வேகம் அதிகரிப்பதைத் தடுக்கும் நோக்கில் பிரதேச செயலகம், பிரதேச சபை, இராணுவத்தினர், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் சுகாதாரத் தரப்பினருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் எனவும் ஓட்டமாவடிச் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (ற-150)

## மண்சரிவு; மக்கள் பாதிப்பு

மாத்தளை, ஜன. 11

சீரற்ற காலநிலை காரணமாக உக்குவளை பிரதேச சபைக்குட்பட்ட எல்வல பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், வீடுகளின் சுவர்கள் மற்றும் நிலத்திலும் வெடிப்புகள் ஏற்பட்டு, அப்பகுதியிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ரி5)

## படைப்புழு பாதிப்புக்கு மதிப்பீட்டின் பின் இழப்பீடு

கொழும்பு, ஜன.11

படைப்புழுத் தாக்கத்தால் சோளச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கான இழப்பீட்டை இந்தப் போகம் நிறைவு பெற்றதன் பின்னர் மதிப்பீடு செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அறுவடையின் பின்னரே சேதங்களை மதிப்பீடு செய்ய முடியும். எதிர்வரும் போகத்தில் ஒரே காலப்பகுதியில் சோளச் செய்கையை ஆரம்பிக்க விவசாயிகள் அறிவுறுத்தப்படவுள்ளனர். இம்முறை செய்கை தாமதமடைந்தமையும் இந்தப் படைப்புழுவின் தாக்கத்துக்கு ஒரு காரணமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## நாடாளுமன்ற தொகுதியில் அன்டிஜன் பரிசோதனை!!

கொழும்பு. ஜன.11

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இம் மாதம் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் ரெபிட் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே ஆகியோர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த வாரம் நாடாளுமன்றத்துக்கு வருகைதந்துள்ளனர்.

இதனையடுத்தே நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்ட அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)